**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**

**FACULTY OF EDUCATION**

**DEPARTMENT OF SPECIAL NEEDS EDUCATION**

**POSTGRADUATE DIPLOMA IN SPECIAL NEEDS EDUCATION PROGRAMME 2019/2020**

**FINAL EXAMINATION 2021**

**SNP8334/ESP2134 – INTRODUCTION TO EXCEPTIONALITIES AND LEARNING NEEDS**

**DURATION – THREE (03) HOURS**

Date: 25.07.2021 Time : 9.30 a.m. – 12.30 p.m.

**Answer All Questions in Part I and any three (03) questions from Part II.**

## PART - I

01. Define the terms 'disability' and 'difficulty.

02. What are the borderlines of IQ level of educable and trainable the children with intellectual disability?

03. State **five (05)** common behavioural characteristics of children with Autism Spectrum Disorders.

04. List **four (04)** common types of hearing loss.

05. Name **five (05)** categories of children, who are eligible to receive Special Education and related services as defined by IDEA 2004.

06. State **five (05)** behavioural indications that can identify a visual impairment of a student.

07. List **five (05)** health impairments that affect children's learning.

08. Gifted and talented children are a specific group who belongs to the classification of Special Educational Needs.
Explain the reasons behind the above statement.

(5 x 8 = 40 marks)

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப் பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2019/2020**

**SNP8334 – விசேட நிலமைகள் மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்**

**இறுதிப் பரீட்சை - 2021**

பகுதி - **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - **II** இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

**திகதி : 25.07.2021** | **நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30**

## பகுதி I

01. 'இயலாமை', 'இடர்பாடு' ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.

02. கல்வி புகட்டக்கூடிய மற்றும் பயிற்றப்படக்கூ-டிய அறிவுசார் இயலாமையுடைய பிள்ளைகளின் நுண்மதி ஈவு மட்டத்தின் எல்லை யாது?

03. ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள பிள்ளைகளின் பொதுவான நடத்தைப் பண்பியல்புகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

04. பொதுவான நான்கு (4) வகையான செவிப்புல இழப்புக்களையும் பட்டியற்படுத்துக.

05. இயலாமையுடைய தனிநபர்களுக்கான கல்விச் சட்டம் (IDEA- 2004) இன் வரையறைகக்கமைய விசேட கல்வி மற்றும் தொடர்பான சேவைகளைப் பெறத் தகுதியுடைய சிறுவர்களின் வகைப்பாட்டினை பெயரிடுக.

06. மாணவனின் விழிப்புல குறைபாட்டினை நீங்கள் இணங்காண்பதற்கு அம்மாணவனிடம் காணக்கூடிய கற்றல், நடத்தைக் குறிகாட்டிகள் ஐந்தினை (5) பெயரிடுக.

07. பிள்ளைகளின் கற்றலைப் பாதிக்கும் சுகாதாரம்சார் குறைபாடுகள் ஐந்தினைப் (5) பட்டியற்படுத்துக.

08. மீத்திறன், கற்றலின் ஆற்றல் மிக்கதுமான மாணவர்கள் விசேட கல்வித்தேவைகள் உள்ள மாணவர்களின் பட்டியலினுள் உட்படுத்தப்படுவதன் அவசியம் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## PART - II

09. i. Explain the terms that are used in the educational context to describe students with visual impairment.

(08 marks)

ii. Describe with examples, how do you facilitate each types of students with visual impairments in an inclusive classroom.

(12 marks)

10. i. State primary characteristics of children with Specific Learning Disabilities.

(08 marks)

ii. Describe how you could provide educational supports to a child with Dyslexia.

(12 marks)

11. i. Explain the concept of Special Needs Education.

(08 marks)

ii. Describe how broad aims of Special Needs Education will be benefited for students with Special Educational Needs.

(12 marks)

12. i. Define the term of 'Physical Impairment'.

(08 marks)

ii. Explain how teachers could use Assistive Technologies to support to a student with Cerebral Palsy.

(12 marks)

13. i. Explain the common characteristics of Non-verbal Learning Disorders.

(08 marks)

ii. How could a teacher facilitate to a student with Non-verbal Disorders in a classroom.

(12 marks)

14. i. Conduct disorder could be divided into **four (04)** main categories. Indicate **four (04)** main categories with their characteristics.

(08 marks)

ii. What are the behaviour management strategies that teachers can use to minimize the disruptive behaviours and increase acceptable behaviours among behaviour problems of students.

(12 marks)

*-Copyrights reserved-*

## பகுதி II

09. i. விழிப்புலக் குறைபாட்டையுடைய மாணவர்களை கல்விப் புலத்தில் விபரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பதங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் வகுப்பறை ஒன்றில் ஒவ்வொரு வகையான விழிப்புலக் குறைபாடுள்ள மாணவர்களுக்கும் எவ்வாறு வசதியளிப்பீர் என்பதை உதாரணங்களை முன்வைத்து விபரிக்குக.

(12 புள்ளிகள்)

10. i. குறிப்பான கற்றல் இயலாமையுடைய பிள்ளைகளின் அடிப்படைப் பண்பியல்புகளைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. சொல்சார் (Dyslexia) இயலாமையுடைய பிள்ளைக்கு எவ்வாறு கல்விசார் உதவிகளை வழங்குவீர் என்பதை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

11. i. விசேட தேவைகள்சார் கல்வி என்ற எண்ணக்கருவை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகள் உடைய மாணவர்களுக்கு விசேட தேவைகள்சார் கல்வியின் பரந்துபட்ட நோக்கங்கள் எவ்வாறு பயனுள்ளதாக அமையும் என்பதை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

12. i. உடல்சார் குறைபாடு என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

(08 புள்ளிகள்)

ii. பெருமூளை வாதம் உள்ள ஒரு மாணவனுக்கு உதவுவதற்கு உதவித் தொழில்நுட்பத்தை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

13. i. சொல்சாரா கற்றல் ஒழுங்கீனத்தின் (Non – Verbal Disorder) பொதுவான பண்பியல்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. வகுப்பறையொன்றில் சொல்சாரா கற்றல் ஒழுங்கீனம் உள்ள ஒரு மாணவனுக்கு ஆசிரியர் எவ்வாறு வசதியளிக்கலாம்.

(12 புள்ளிகள்)

14. i. நடத்தைசார் ஒழுங்கீன நடத்தைகளைப் பிரதானமாக நான்கு (4) குழுக்களாக வகைப்படுத்தலாம். அந்த நான்கு (4) பிரதான வகைப்பாடுகளையும் அதற்கமைய நடத்தைகளையும் குழுவாக்கம் செய்க.

(08 புள்ளிகள்)

ii. நடத்தைசார் பிரச்சினைகள் உள்ள மாணவர்கள் மத்தியில் ஏற்புடைய நடத்தைகளை அதிகரிப்பதற்கும், இடையூறு ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை இழிவாக்கவும் ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய நடத்தை முகாமைத்துவ உபாயங்கள் யாவை?

(12 புள்ளிகள்)

"பதிப்புரிமை பெற்றது"